## 61. மடி இன்மை

601. *குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்*
*மாசூர மாய்ந்து கெடும்*

**குடிப்பெருமை கொண்ட குடும்பம் எனும் மங்காத**
**குன்றா விளக்கு ஒளி மயமாக**
**குன்றிலிட்ட விளக்கு போல ஒளிர்ந்தாலும்**
**குற்ற வரிசையில் வரும் சோம்பல் மட்டும்**
**குடி கொண்டு விட்டால், ஒளி மங்கி இருண்டு விடும் !**

602. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
*குடியாக வேண்டு பவர்*

**குடித்தனத்தைச் சிறந்த நல்**
**குடியாக உயர்த்த வேண்டுபவர்**
**சோம்பலைச் சோர்வின்றி அகற்றி**
**சோடையின்றி முயற்சிக்க வேண்டும்!**

603. *மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த*
*குடிமடியுந் தன்னினு முந்து*

**‘மடி’ என்னும் சோம்பலைப் பல**
**மடங்கு மிகுந்து வைத்துள்ள**
**மடத்தனம் மிகுந்த மூடன் பிறந்தால் – அவன்**
**மடிவதற்கு முன்னால் அவன் குடி**
**மடிந்து மூழ்கிவிடும் !**

604. *குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து*
*மாண்ட உஞற்றி லவர்க்கு*

**சோர்வுடன் எப்போதும் வாழ்க்கையில்**
**சோம்பலில் மூழ்கிப் போனவர்களின்**
**குடும்பப் பெருமை சீரழிந்து போகும்**
**குற்றங்களும் வாழ்க்கையில் பெருகி விடும் !**

605. *நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
*கெடுநீரார் காமக் கலன்*

**கால தாமதம், மறதி, சோம்பல்**
**கால அளவிற்கு மீறிய தூக்கம் – இந்த**
**கெடுதிக் குணங்கள் நான்கும் உடையவர்**
**கெட்டழிந்து போகிறவர்கள் விரும்பி ஏறும் மரக்கலம் !**

**606.** *படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்*
*மாண்பயன் எய்தல் அரிது*

**படியளிக்கும் அரசனின் நட்பின்**
**பற்றே அமைந்திருந்தாலும்**
**'மடி' என்னும் சோம்பல் உடையவர்**
**மதிப்பின் பயனை பெறுவது அரிது !**

**607.** *இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து*
*மாண்ட உஞற்றி லவர்*

**சோம்பலின் மடியில் விழுந்தவர்கள்**
**சோர்வின்றி உழைத்து நற்காரியங்களை**
**நிகழ்த்த முடியாதவர்கள் – மக்களின் வசைவுக்கு**
**நித்தம் இடிபட்டு இகழ்ச்சிக்கு ஆளாவார்கள் !**

**608.** *மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஏனான்னார்க்*
*கடிமை புகுத்தி விடும்*

**நல்ல குடியில் பிறந்தாலும்**
**நன்மை பயக்காத சோம்பலில் வீழ்ந்துவிட்டால்**
**அந்தச் சோம்பலே அக்குடும்பத்தைப் – பகைவருக்கு**
**அஞ்சி அடிமையாக்கி விடும் !**

**609.** *குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்*
*மடியாண்மை மாற்றக் கெடும்*

**சோம்பலினால் ஆட்படுவதைத் தகர்த்து ஒருவன்**
**சோதனைகளைக் கடந்து விட்டால்**
**குடிப்பெருமைக்கும், ஆண்மைக்கும் ஏற்பட்ட**
**குற்றங்கள் நீங்கி விடும் !**

**610.** *மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்*
*தாஅய தெல்லாம் ஒருங்கு*

**காலத்திற்கும் சோம்பல் இல்லாத மன்னன் – தன்**
**கால் பட்ட இடத்தையெல்லாம்**
**காலடி எல்லைக்குள் கொண்டு வருவான்**
**காலால் உலகளந்த திருமால் போல !**